1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (4-4-1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை இரவு 7.47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

63. நாட்டுச் சர்க்கரைக்கு வரிவிதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 6-1-1987 ஆம் நாளிட்ட 15 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

64. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 8-1-1987 ஆம் நாளிட்ட 22 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

65. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாவது திருத்த) சட்டத்தின் வழிமுறைகள் நடைமுறைக்கு வரும் தேதியினைக் குறிப்பது குறித்து வணிக வரிகள்- சமய அறக்கட்டளைகள் துறையின் 29-12-1986 ஆம் நாளிட்ட 1321 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. படங்கள் மற்றும் படச் சட்டங்கள் ஆகியவற்றிற்கு அளித்து வந்த வரிவிலக்கினை திரும்பப் பெறுவது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29-12-1986 ஆம் நாளிட்ட 1326ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

67. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

68. 1985–86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

107. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் கால வரைக்கான தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்புக் குழுவின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

108. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

109. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

110. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

111. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88. (தமிழ், ஆங்கிலம்)

112. கோரிக்கை எண். 22—கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88. (தமிழ், ஆங்கிலம்)

113. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1987–88. (தமிழ், ஆங்கிலம்)

114. தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

115. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

116. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால்—1987' என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

117. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை.

118. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் உள்துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை.